# வேலணை பிரதேச சபை

## 2024 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2024 தொடக்கம் 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 30.10.2023 முதல் 13.11.2023 மதியம் 12.00 மணி வரை
(அலுவலக நாட்களில்)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-13.11.2023 பி.ப 01.00 மணி வரை
(அலுவலக நாட்களில்)

கேள்வி திறக்கும் திகதி :- 13.11.2023 பி.ப 02.00 மணி

| தொ .இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | 2024 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 42,460.00 |
| 2 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 17,600.00 |
| 3 | சரவணை மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 9,860.00 |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 133,650.00 |
| 5 | நயினாதீவு மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 38,100.00 |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 11,550.00 |
| 7 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் ( படகு சேவை தவிர்த்து) | 2,000.00 | | 5,000.00 | 341,000.00 |
| **வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும்** | | | | | |
| 8 | வேலணை துறையூர் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 220,000.00 |
| 9 | கடை இல - 02 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 35,200.00 |
| 10 | கடை இல – 03 சிற்றுண்டிச்சலை | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 133,000.00 |
| 11 | கடை இல – 04 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 36,150.00 |
| 12 | கடை இல - 05 | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 38,500.00 |
| 13 | கடை இல – 06 கோழிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 37,600.00 |
| **வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்)** | | | | | |
| 14 | மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 39,050.00 |
| 15 | சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 1,750.00 | 5,000.00 | 27,600.00 |
| 16 | கோழிக்கடை | 2,000.00 | 750.00 | 5,000.00 | 230,500.00 |
| **புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும்** | | | | | |
| 17 | கோழிக்கடை | 2,000.00 | 500.00 | 5,000.00 | 170,500.00 |
| 18 | கடை இல – 05 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 600.00 | 5,000.00 | 51,700.00 |
| 19 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 115,500.00 |
| **நயினாதீவு கடைத்தொகுதி** | | | | | |
| 20 | கடை இல - 01 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 21 | கடை இல - 02 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 22 | கடை இல - 03 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 23 | கடை இல - 04 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 24 | கடை இல - 05 | 2,000.00 | 1,000.00 | 10,000.00 | 120,000.00 |
| 25 | கடை இல - 06 | 2,000.00 | 1,100.00 | 11,000.00 | 132,000.00 |
| 26 | கடை இல - 07 | 2,000.00 | 1,100.00 | 11,000.00 | 132,000.00 |
| 27 | கடை இல - 08 | 2,000.00 | 900.00 | 9,000.00 | 108,000.00 |

பொதுவான நிபந்தனைகள்:- சந்தைகள்

1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2) தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது.
3) கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

4) கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"செயலாளர், பிரதேசசபை, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புப்படல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் "** என்ற முகவரிக்கு **13.11.2023** ம் திகதி பிற்பகல் **01.00 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

5) பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.

6) கடைகள், இறைச்சிக் கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.

7) தெரிவு செய்யப்படும் சந்தைகளின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் **1/3** பங்கினையும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்விதாரர் சித்திகர தொகையின் **2/3** பகுதியினையும் **20.11.2023** திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

8) சந்தையை குத்தகைக்கு எடுப்பவரினால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

9) வாகனத்தரிப்பிடம், மற்றும் பொது மலசலகூடத்தினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவீடுகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது.

10) சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரியாக அறவிடக்கூடாது.

11) செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் குறித்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.

நிபந்தனைகள் - கடைத்தொகுதி

1. கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் கேள்விப் பத்திரங்கள் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. கேள்வி கோரலில் சித்திபெற்றவர்கள் குறித்த கேள்வித்தொகையினை (Key money) ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
3. மூன்று மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் **10** ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும்பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப்பணமாக குறித்த மாத வாடகைத் தொகையில் **10%** அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப் பணத்தினை **டிசம்பர் மாதம் 29** ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
5. வருடந்தோறும் சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி அல்லது வியாபார உரிம கட்டணத்தினை செலுத்தி வியாபார அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே வழங்கப்படும்.
7. பராமரிப்பு வேலைகள் மற்றும் கழிவகற்றல் என்பவற்றை சபையின் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

- **மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.**
- **குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.**

**திரு.தி.தியாகச்சந்திரன்,**
**செயலாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

**திகதி:- 29.10.2023**